அனுப்புநர்

திரு. மா. சந்திரசேகரன், இ.ஆ.ப.,
பேரூராட்சிகளின் இயக்குநர்,
குறளகம், சென்னை–108

பெறுநர்

பொது செயலாளர்,
ஆதித் தமிழர் பேரவை,
சக்தி ரமா அடுக்ககம்,
3வது தளம், 'இ' 2/2 ஏ,
கிழக்கு லோகமான்ய வீதி,
இரத்தின சபாபதிபுரம்,
கோவை–641 002.

ந.க.எண்.8190/2008/இ3 நாள் 30.04.2012

அய்யா,

பொருள் :- பொது சுகாதாரம்–பேரூராட்சிகளின் நிர்வாகம்– துப்புரவு பணியாளர்கள் நலன்–பாதுகாப்பு சாதனங்கள் மற்றும் மருத்துவ பரிசோதனைகள் வழங்குதல்–குறித்த நடவடிக்கைகள்–தொடர்பாக.

பார்வை :- 1. தங்களது கடிதம் நாள் 11.4.2012
2. இவ்வியக்கக சுற்றறிக்கை ந.க.எண்.8190/2008/ இ3, நாள் 16.3.2012

---

பார்வை 1ல் காணும் தங்களது கடிதத்தின்படி, தூய்மை பணிகளில் ஈடுபடும் துப்புரவு பணியாளர்களின் நலன் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ள, கோரிக்கைகளின்படி, பார்வை 2ல் காணும் இவ்வியக்கக சுற்றறிக்கையின்படி, பேரூராட்சிகளில் துப்புரவு பணி மேற்கொள்பவர்களுக்கு, பாதுகாப்பு சாதனங்கள் மற்றும் மருத்துவ பரிசோதனைகள் வழங்குதல் குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. நகல் இணைக்கப்பட்டுள்ளது.

ஒம்/– வி.இராஜன்துரை,
இயக்குநருக்காக

இணைப்பு:- சுற்றறிக்கை

/உத்திரவுப்படி/

செயல் அலுவலர் (நிர்வாகம்)

2/5/2012

பேரூராட்சிகளின் இயக்ககம்,
குறளகம், சென்னை–108.

ந.க.எண்.8190/2008/இ3

நாள். 16.03.2012.

## சுற்றறிக்கை

பொருள் - பொது சுகாதாரம் – பேரூராட்சிகளின் நிர்வாகம் – துப்புரவு பணியாளர்கள் நலன் – பாதுகாப்பு சாதனங்கள் மற்றும் மருத்துவ பரிசோதனைகள் துப்புரவு பணி மேற்கொள்ளபவர்களுக்கு வழங்கிடுதல் – அறிவுரை வழங்குதல் – சார்பாக.

பார்வை -
1) அரசாணை எண்.(2டி) 37 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி) துறை நாள்.14.5.1999.
2) திரு.எஸ்.சரவணன், பி.ஏ.பி.எல் வழக்குரைஞர் என்பவரின் மனு நாள்.26.11.2011.

-----

பார்வை 1–ல் காணும் அரசாணையில், பேரூராட்சிகளில் பணிபுரியும் பொது சுகாதார பணியாளர்களுக்கு சீருடை மற்றும் பிற உபகரணங்கள் வழங்குவது குறித்து கடை பிடிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்டிபடி அரசாணையில் பேரூராட்சியில் பணிபுரியும் ஆண் மற்றும் பெண் துப்புரவு பணியாளர்களுக்கு கீழ்கண்ட விபரப்படி சீருடை மற்றும் பிற உபகரணங்கள் வழங்குவது தொடர்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**ஆண்கள்**

| | |
|---|---|
| அரைக்கால் சட்டை | : 0.80 x 2 = 1.60 மீட்டர் |
| அரைக்கை சட்டை | : 1.75 x 2 = 3.50 மீட்டர் |

**பெண்கள்**

1. இரண்டு பாலிஸ்டர் புடவைகள் ஒவ்வொன்றும் 5.5. மீட்டர் அளவு இரண்டு ரவிக்கைக்கான துணி ஒவ்வொன்றுக்கும் 0.90 x 2 = 1.80 செ.மீ.
2. ஆண், பெண் இருவருக்கும் ஆண்டிற்கு ஒரு முறை தலைப்பாகைத் துணி 2.00 மீட்டர் அளவில் வழங்கப்பட வேண்டும்.
3. இருபாலர்க்கும், ஆண்டு ஒன்றுக்கு ரூ.140/–க்கு மிகாத மதிப்புள்ள ஒரு ஜோடி காலனி வழங்கப்பட வேண்டும்.

4. தையற்கூலி ஆண்களுக்கு 1 ஜோடி சீருடைக்கு ரூ.100/– வீதம் ஆண்டிற்கு ரூ.200/–ம் பெண்களுக்கு 1 ரவிக்கைக்கு ரூ.20/– வீதம் ஆண்டிற்கு ரூ.40/–ம் வழங்கப்பட வேண்டும்.

5. துணி, செருப்பு முதலியன ஒவ்வொரு ஆண்டும் தீபாவளிப் பண்டிக்கைக்குக் குறைந்தது 15 நாட்களுக்கு முன்பாவது வழங்க வேண்டும்.

6. இவ்வாணையின் நகலினை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மண்டல அலுவலர்களுக்கும், கள அலுவலர்களுக்கும், அனுப்புமாறு நகராட்சி நிர்வாக ஆணையரும் பேரூராட்சி இயக்குநரும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

7. இவ்வாணை 13.3.99 நாளிட்ட அரசாணை எண்.912/எப்.எஸ்.ப்பி/99–ல் பெறப்பட்ட நிதித் துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது

இவ்வாணையில் தெரிவிக்கப்பட்ட நடைமுறைகளை அனைத்து பேரூராட்சிகளிலும், கடைபிடிக்கப்பட வேண்டும் என பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள் ஆய்வு கூட்டங்களில் நேரடியாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பேரூராட்சிகளில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு, மேற்படி சலுகைகள் மற்றும் பிற பாதுகாப்பு உபகரணங்கள் சரிவர வழங்கப்படுவதில்லை என பார்வை 2–இல் காணும் வழக்குரைஞரின் கடிதத்தில் புகார் தெரிவிக்கப்பட்டு, இதன் தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றத்திலும் வழக்கு தொடரப்பட்டு உள்ளது.

எனவே, பேரூராட்சிகள் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு, பார்வை 1–இல் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டவாறு அனைத்து சுகாதார பணியாளர்களுக்கும் சீருடை மற்றும் இதர உபகரணங்கள் விதிமுறைகளின்படி வழங்கப்பட்டுள்ளனவா என்பதனை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள் ஆய்வு செய்து உறுதி அளிக்குமாறும், மேற்படி துணி மற்றும் பிற உபகரணங்கள் எந்த பேரூராட்சியிலாவது வழங்கப்படாமல் இருப்பின் சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்கள் நடவடிக்கை எடுப்பதுடன் சீருடை மற்றும் இதர உபகரணங்களை உடனே கிடைத்திட தக்க வகையில் நடவடிக்கை எடுத்து அதன் விவரத்தினை தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், இது தவிர பேரூராட்சிகளில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு வேறு ஏதேனும் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டு வருமேயானால் எந்த வகையான உபகரணங்கள் வழங்கப்பட்டு வரப்படுகின்றன என்பதனையும் குறிப்பிட்டு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இந்த சுற்றறிக்கையினை அனைத்து செயல் அலுவலருக்கும் அனுப்பி அதன்படி செயல்பட அறிவுறுத்திடுமாறும், இதன் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை 25.3.2012–க்குள் இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைக்கும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஓம்/– மா.சந்திரசேகரன்,
இயக்குநர்

பெறுநர்

அனைத்து மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர்கள்

நகல்–

1) அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
2) அனைத்து செயல் அலுவலர்கள் (சம்மந்தப்பட்ட மண்டல உதவி இயக்குநர்கள் மூலமாக)
3) திரு.எஸ்.சரவணன், த/பெ.செல்வராஜ்,
புதிய எண்.273, பழைய எண்.130, 2–வது தளம்,
தம்புச் செட்டிச் தெரு, சென்னை–1

// உத்தரவின் படி //

2/5/12
செயல் அலுவலர் (நிர்வாகம்)

2/5/2012